முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல் – பாகம் 2**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.11.2021**, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞான வடிவே
ஓங்கார சூட்சும பலமே
ஓங்காரனே ஆறுமுக அரங்கனே
ஓதிடுவேன் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ துலை திங்கள்
இருபானை திகதி குரு வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள், 11.11.2021 வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் வியாசமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
ஞானமதை தவமாகக் கருதி
நம்பிக்கை கொண்டு மக்கள் வர
4. வருகவே அரங்கஞானி ஆசியால்
வளர்ச்சிப் பாதைகளாக மாறி
தருமசிந்தை பெருகி இனிதே
தரணியில் அற்புதம் நிகழும்
5. நிகழும் சன்மார்க்க பலத்தால்
நீதிமான்கள் ஞானவான்கள் தலைமை
அகிலமெங்கிலும் பரவி இனிதே
ஆறுமுகனார் ஞான ஆட்சியாக மலரும்
6. மலரும் மக்களை பாதுகாத்து
மண்ணையும் பாதுகாக்கின்றவாறு
வளரும் ஞானிகள் வெளிப்பாடு
வையகம் எங்கிலும் நடந்து
7. நடந்து உலகினில் தீங்கு
நச்சுக்கிருமி இயற்கை பேரிடரென
இடர்கள் எதன்வழியும் வாரா
எல்லாப் பாதுகாப்பும் காணக் கூடும்
8. கூடவே மக்களிடை ஞானமும்
குறைகாணா செயல்பாடுகளும்
நாடெங்கிலும் கூடி இனிதே
ஞானவான்கள் கூட்டம் பெருகும்
9. பெருகவே இந்தவித மாற்றத்தை
பேருலகம் எங்கும் ஞானிகள்
முருகப்பெருமான் தலைமை ஏற்று
முழுமதி கால பூசைகள் செய்து

10. செய்துமே மக்களை தேற்ற
சுத்த சைவ நெறி முறையோடு
உய்வுதரும் அன்னதான சேவை
உலகமெங்கிலும் செய்து வர

11. வருகவே சடுதி மாற்றமும்
வையகம் கண்டு உயரும்
தருமத்தால் உலகினில் மாற்றம்
தனித்துவம்பட ஞானலோகமாகும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–